செய்தி வெளியீடு எண்: 370 நாள் : 11.07.2013

**<u>செய்தி வெளியீடு</u>**

தமிழகத்தில் உணவு பாதுகாப்பினை ஏற்படுத்தும் வகையில், பொது விநியோக திட்டத்தின் கீழ் விலையில்லா அரிசி, வெளிச்சந்தையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு கிலோ 20 ரூபாய் என்ற விலையில் அரிசி விற்பனை என பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களை திறமையாக செயல்படுத்த அறுவடைக் காலங்களில் உணவு தானியங்களை கொள்முதல் செய்து, சேமித்து வைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியம். கொள்முதல் செய்யப்பட்ட உணவு தானியங்களை சேமித்து வைக்க மாநிலம் முழுவதும் நவீன வசதிகளுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகளை கட்டுவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

உற்பத்தி செய்யப்பட்ட உணவு தானியங்களை சேமித்து வைத்திட 6.68 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு வசதி கொண்ட கிடங்குகள் தற்பொழுது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் உள்ளன. உணவு தானியங்களை சேமித்து வைக்க கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு 19 மாவட்டங்களில் நவீன வசதியுடன் கூடிய 47 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அவற்றுள் தற்பொழுது முதற்கட்டமாக 117 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய 1,46,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 37 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட நிர்வாக ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

அந்த வகையில், தஞ்சாவூர், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், புதுக்கோட்டை, சிவகங்கை, நாமக்கல், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருப்பூர், தூத்துக்குடி, திருவள்ளூர், திருச்சி, கரூர், ராமநாதபுரம், ஈரோடு, தருமபுரி, சேலம் மற்றும் வேலூர் ஆகிய 19 மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நவீன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நிர்வாக ஒப்புதல் அளித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நடவடிக்கைகள் மூலம் உணவு தானியங்கள் பாதுகாப்பாக சேமிக்கப்பட வழிவகை ஏற்படும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் :- 11.7.2013.